

வேலூர் பேபி மஹாலில் நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவில் பகுத்தறிவு சீர்திருத்தச் செம்மல் கலைஞர் சிறப்பு மலரை கழகப் பொதுச் செயலாளர் – நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில் அமைச்சர்கள் சு.முத்துசாமி, அர.சக்கரபாணி, ஆர். காந்தி, குழு உறுப்பினர்கள் மற்றும் நீர்வளத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் சந்தீப் சக்சேனா, கூடுதல் செயலாளர் திருமதி.மலர்விழி, மாவட்ட ஆட்சித் தலைவர் பெ.குமாரவேல் பாண்டியன், நாடாளுமன்ற உறுப்பினர் து.மு.கதிர்ஆனந்த், சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ.பி. நந்தகுமார். ப.கார்த்திகேயன், திருமதி அமுலு விஜயன், அ.செ. வில்வநாதன், ஜே.எல். ஈஸ்வரப்பன், வேலூர் மாநகராட்சி மேயர் திருமதி.சுஜாதா ஆனந்தகுமார், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் பாபு. மாநகராட்சி துணை மேயர் சுனில் குமார் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### திரையுலகம், அரசியல் உலகில்

# கலைஞர் தொட்ட சிகரத்தை யாரும் தொட முடியாது!

## வேலூரில் கலைஞர் நூற்றாண்டு விழாவில் அமைச்சர் துரைமுருகன் பெருமிதம்!

வேலூர், நவ. 28 -

"திரையுலகம், அரசியல் உலகில் கலைஞர் தொட்ட சிகரத்தை யாராலும் தொட முடியாது" என கழக பொதுச்செயலாளர், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் தெரிவித்தார்.



தமிழ்நாடு அரசு சார்பில் முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டு வரும் நிலையில் நீர்வளத்துறை சார்பில் வேலூரில் 'பகுத்தறிவு சீர்திருத்த செம்மல் கலைஞர்' என்ற தலைப்பில் நேற்று முன்தினம் நிகழ்ச்சி நடைபெற்றது.

இதன் ஒரு பகுதியாக, வேலூர் நகர அரங்கில் புகைப்படக் கண்காட்சியை கழகப் பொதுச் செயலாளர், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் திறந்து வைத்து பார்வையிட்டார்.

தொடர்ந்து, தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 'பகுத்தறிவு சீர்திருத்தச் செம்மல் கலைஞர் நூற்றாண்டு விழா" சிறப்பு மலர் மற்றும் குறும் படத்தை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் வெளியிட்டார்.

முன்னதாக நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் பேசும்போது, 'கலைஞரும் திருவண்ணாமலையில் உள்ள அருணாச்சலேஸ்வரரும் ஒன்று தான். ஏனென்றால், அருணாச்சலேஸ்வரர் அடி, முடி காண முடியாதவர். அதுபோலத் தான் கலைஞரும். அவர் தொட்ட சிகரத்தை யாரும் தொட்டது கிடையாது.

திரைப்பட உலகில் பராசக்தி, மனோகரா படங்களின் வசனம் போல் கடந்த 50 ஆண்டுகளுக்குப் பிறகும் யாராலும் வேறு ஒரு வசனத்தையும் எழுத முடியவில்லை. புதிதாக நடிக்க வருபவர்களை பராசக்தி வசனத்தை பேசச் சொல்லித்தான் தேர்வு வைக்கின்றனர்.

அதேபோல், அரசியல் உலகில் சுதந்திர தினம், குடியரசு தின விழாவுக்கு ஆளுநர் தேசிய கொடியேற்றிய நிலையில் சுதந்திர தினத்தில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல்வர்கள் தேசிய கொடியை ஏற்ற வேண்டும் என இந்திரா காந்தியிடம் கேட்டவர் கலைஞர்.

அதன் விளைவு சுதந்திர தின விழாவில் முதல்வர்கள் தேசிய கொடி ஏற்றலாம் என்ற உரிமையை வாங்கிக்கொடுத்தவர் கலைஞர். வங்கிகளை தேசிய மயமாக்க இந்திரா காந்திக்கே யோசனை கொடுத்தது கலைஞர் தான். திருவள்ளுவருக்கு வானுயர்ந்த சிலை, தமிழுக்குச் செம்மொழி அந்தஸ்து, மெட்ராஸ் என்பதை சென்னை என்று மாற்றி அவர் செய்ததை யாரும் தொட முடியாது. அவரது எழுத்து, பேச்சு, நிர்வாகத்தை யாரும் தொட முடியாது.

பேரறிஞர் அண்ணா மீது அபரிமிதமான பற்றுக்கொண்டவர். தினசரி 500 முறையாவது அறிஞர் அண்ணாவின் பெயரை கூறி விடுவார். ஒரு தொண்டன், தலைவராய் எப்படி இருக்க வேண்டும் என்று எடுத்துக் காட்டாய் இருந்தவர் கலைஞர். அதை நிரூபித்தும் காட்டினார். எதையும் சாதிக்கும் குணம் கலைஞருக்கு உண்டு".

இவ்வாறு அமைச்சர் துரைமுருகன் அவர்கள் கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் அமைச்சர்கள் சு.முத்துசாமி, அர.சக்கரபாணி, ஆர்.காந்தி ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

இதில், நீர்வளத்துறை அரசு கூடுதல் தலைமை செயலாளர் சந்தீப் சக்ஸேனா, வேலூர் மாவட்ட ஆட்சியர் குமாரவேல் பாண்டியன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் கதிர் ஆனந்த், எம்.எல்.ஏ.க்கள் நந்தகுமார், கார்த்திகேயன், அமலு விஜயன், வில்வநாதன், ஈஸ்வரப்பன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இந்நூற்றாண்டு விழாவில் திருச்சி கலைக்காவேரி கலைக்குழுவினரின் கலை நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் எம்.பி.சிறப்புரையாற்றி வாழ்த்திப் பேசினார்.

தொடர்ந்து, மாலை 6 மணியளவில் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞரின் நிலைத்த புகழுக்குப் பெரிதும் காரணம் இலக்கியப் பணியா? சமுதாயப் பணியா? என்ற தலைப்பில் சிறப்பு பட்டிமன்றம் நடைபெற்றது. நகைச் சுவை நாவலர் புலவர் மா.ராமலிங்கம் நடுவராகவும், இலக்கியப் பணியே என்ற தலைப்பில் குறிஞ்சிப்பாடி முனைவர் இரா. நவஜோதி, பட்டுக் கோட்டை முனைவர் பி.பாஸ்கர், திருச்சி அன்னலட்சுமி ஆகியோர் பேசினர். சமுதாயப் பணியே என்ற தலைப்பில் சேலம் அபு, மணப்பாறை கவிஞர் லலிதா, திருத்தணி வேதநாயகி ஆகியோர் பேசினர்.

### அரசின் சமூக நலத்திட்டங்கள் எந்த அளவிற்குப் பயனளிக்கிறது என்று ஆராய்ந்திட நடைபெறும் ஆய்வே இது!

# சமூக நீதியின் அடிப்படை தெரியாமல் அறிக்கை விடுகிறார் எடப்பாடி!

## போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கண்டன அறிக்கை!

சென்னை, நவ. 28 -

அரசுப் பேருந்துகளில் மகளிர்க்கு கட்டணமில்லா இலவசப் பயணத்திற்கு வழிகோலும் கழக அரசின் 'மகளிர் விடியல் பயணம்' எனும் சமூக நலத்திட்டம் மக்களுக்கு எந்த அளவிற்குப் பயனளிக்கிறது என்பதை ஆராய்ந்திட நடைபெறும் ஒரு ஆய்வே, பேருந்துகளில் பயணம் மேற்கொள்ளும் மகளிரிடம் நடத்தப்படும் சர்வே என்றும் - சமூக நீதியின் அடிப்படை தெரியாமல் அறிக்கை விடுகிறார் எடப்பாடி பழனிச்சாமி என்றும், போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் விடுத்துள்ள அறிக்கையில் கண்டனம் தெரிவித்துள்ளார்.



அவரது அறிக்கை வருமாறு:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் மகத்தான திட்டம் "மகளிர் விடியல் பயணம்". அதன் மகத்தான வெற்றி நாடறிந்த ஒன்று. இத்திட்டத்தின் வெற்றியை பார்த்து, இத்திட்டத்தை மற்ற மாநிலங்கள் செயல்படுத்துவதை பார்த்து வருகிறோம். இந்த வெற்றியை பொறுக்காத சிறுமதியாளர்கள் இந்தத் திட்டத்தை சிறுமைப்படுத்த பல முயற்சியை எடுத்தார்கள்.

கோயம்புத்தூரில் ஒரு வயதான பெண்மணியை வைத்து நாடகம் அரங்கேற்றி பார்த்தார்கள். "எனக்கு இலவச பயணம் வேண்டாம். டிக்கெட் கொடு" என கேட்க வைத்து, அதை வீடியோ எடுத்து சமூக வலைதளங்களில் வெளியிட்டு பார்த்தது எடப்பாடி டீம். அதை பார்த்து பெண்கள் கட்டணமில்லா பயணத்தை புறக்கணித்து விடுவார்கள் என மனப்பால் குடித்தார்கள். இந்த பொய்யையும், புரட்டையும் புறந்தள்ளி தொடர்ந்து "விடியல் பயணத்தை" பயன்படுத்துகிறார்கள் தமிழ்நாட்டு பெண்கள். இதற்கு சாட்சி, இந்த திட்டம் துவங்கி யதிலிருந்து இன்று வரை தமிழ் நாட்டு பெண்கள் மேற்கொண்டிருக்கும் கட்டணமில்லா பயணம் 380 கோடியைத் தாண்டியிருப்பதே.

கோவை பெண்ணின் முயற்சியின் தொடர்ச்சியே எடப்பாடி பழனிசாமியின் அறிக்கை. பயணம் செய்பவர்களின் சாதியைக் கேட்டு விட்டார்கள் என்று துடிக்கிறார். சமூகநீதிக்கு எதிரான தினமலர் பத்திரிக்கை துடிப்பதில் அர்த்தம் உள்ளது. ஆனால் பேரறிஞர் அண்ணா பெயரிலான கட்சியின் பொது செயலாளராக இருந்து கொண்டு, எடப்பாடி பழனிசாமி இப்படி அறிக்கை விடுவது தான் கொடுமை.

**பெரியாரைப் படித்தால்தான் புரியும்!**

"ஆரியம் திராவிடம் குறித்த ஆளுநர் ரவியின் பேச்சு" குறித்து கேட்டதற்கு, 'நான் புராணம் படித்தவனல்ல' என்று பதிலளித்த எடப்பாடி, அதற்குள் எந்தப் புராணத்தை படித்து இந்த அறிக்கையை வெளியிட்டார். சாதிகளின் பெயரை சொல்லி மக்களை அடுக்கு முறையில் அமுக்கி வைக்கப்பட்டவர்களை அந்த சாதியின் பெயராலேயே கைதூக்கி விடுவது தான் இடஒதுக்கீடு. இது தான் சமூகநீதி. இதெல்லாம் புராணம் படித்தால் தெரியாது, பெரியாரை படித்தால் தான் புரியும்.

ஒரு அரசு, சமூக நலத் திட்டங்களைச் செயல்படுத்தும் போது, அந்தத் திட்டம் மக்களுக்கு எந்த அளவிற்கு பலனளிக்கிறது என்று ஆராய்ந்து அதை இன்னும் செம்மைப் படுத்த முனைவது மக்கள் நல அரசின் கடமை. அந்த வகையில் தான் மாநில திட்டக்குழு விடியல் பயணம் குறித்து ஓர் ஆய்வு மேற்கொண்டு ஒரு அறிக்கை தாக்கல் செய்தது. அந்த ஆய்வின் முடிவில், விடியல் பயணம் மூலமாக சராசரியாக ஒவ்வொரு மகளிருக்கும் ரூபாய் 88, பேருந்து கட்டணமாக செலவிட்டது மிச்சமாகிறது என்பது தெரிய வந்தது.

அதன் அடுத்த கட்ட ஆய்வு தான் இப்போது நடந்து கொண்டிருக்கிறது. சமுதாயத்தின் எந்த அடுக்கை சேர்ந்தவர்களுக்கு, எந்த வயதினருக்கு, எத்தகைய வருவாய் உள்ளோருக்கு இந்தத் திட்டம் பயன்படுகிறது என்று ஆய்வு அறிக்கையின் அடிப்படையில் அறிந்து அதனை இன்னும் கூர்மைப்படுத்துவது தான் இதன் நோக்கம்.

**டப்பிங் வாய்ஸ்!**

சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தச் சொல்லி, இந்திய துணைக் கண்டத்தின் பெரும்பாலான கட்சிகள் வலியுறுத்திக் கொண்டிருக்கின்ற நேரத்தில், இத்தகைய குரலை எடப்பாடி பழனிசாமி எழுப்புவது என்ன காரணம் என்பது ஒரு விஷயத்தைக் கூர்ந்து கவனித்தால் புரியும். சாதிவாரி கணக்கெடுப்பை எதிர்க்கும் ஒரே கட்சி பாரதிய ஜனதா கட்சி. அந்த டப்பிங் வாய்ஸ் இங்கே ஒலிக்கிறது.

மகளிருக்கான கட்டணமில்லாப் பேருந்துகள் குறைவாக இருக்கின்றன, ஓ.சி. டிக்கெட் என்றார்கள் என்ற அவர் அறிந்த புராணத்தை, வழக்கம் போல் பாடியிருக்கிறார். அப்படி எல்லாம் இருந்தால் 40 சதவிகிதமாக இருந்த மகளிர் பயணம் எப்படி 68 சதவிகிதமாக உயர்ந்திருக்கும் ? அப்படி இருந்தால் எப்படி ஒரு நாளைக்கு 49 லட்சம் பெண்கள் விடியல் பயணத்தை மேற்கொள்வார்கள் ? அப்படி இருந்தால் இதுவரை எப்படி 380 கோடி கட்டணமில்லா பயணங்கள் மேற்கொள்ளப் பட்டிருக்கும் ?

முதல்வர் தளபதி அவர்களின் மகத்தான திட்டங்களான "கலைஞர் மகளிர் உரிமைத் தொகை, மகளிர் விடியல் பயணம், புதுமைப் பெண் திட்டம், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்" போன்ற திட்டங்களாலும், இன்ன பிற நலத்திட்டங்களாலும் தமிழ்நாட்டு மக்கள் முதல்வர் பின்னால் திரள்வதால் ஏற்பட்ட வயிற்றெரிச்சலில் ஒரு எதிர்கட்சித்தலைவராக இது போன்று அறிக்கை விடுவது எடப்பாடி பழனிசாமி அவர்களின் வாடிக்கைதான். ஆனால் அதற்காக திராவிட இயக்கத்தின் அடிப்படைகளை மறந்துவிடக் கூடாது.

இவ்வாறு அமைச்சர் சா.சி.சிவசங்கர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.



தஞ்சாவூர் மாவட்டம், மேலவஸ்தாச்சாவடி அருகே புதிதாக கட்டப்பட்டு வரும் புதிய டைட்டல் பார்க் கட்டிட பணிகளை தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா பார்வையிட்டு ஆய்வு செய்தார். ஆய்வின் போது தமிழ்நாடு டைட்டல் பார்க் மேலாண்மை இயக்குனர் ஜெயசந்திரபானு ரெட்டி, மாவட்ட ஆட்சித் தலைவர் தீபக்ஜேக்கப் , சட்டமன்ற உறுப்பினர்கள் துரை சந்திரசேகரன், டி.கே.ஜி.நீலமேகம், மாநகராட்சி துணை மேயர் மரு.அஞ்சுகம் பூபதி ஆகியோர் உடனிருந்தனர்.



மேனாள் இந்தியப் பிரதமர் சமூகநீதிக் காவலர் வி. பி. சிங் அவர்களின் திருவுருவச் சிலை திறப்பு விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்ள வருகை புரிந்த உத்தர பிரதேச மாநில முன்னாள் முதலமைச்சர் அகிலேஷ் யாதவ் அவர்களை நேற்று முன்தினம் (26.11.2023) சென்னை விமான நிலையத்தில் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர். பி. ராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் மருத்துவர் இரா. செல்வராஜ், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் த.மோகன், ஆகியோர் வரவேற்றனர்.

# தஞ்சையில் ரூ.27.13 கோடி மதிப்பில் தொழில்நுட்ப பூங்கா!

## அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா நேரில் ஆய்வு!

தஞ்சாவூர், நவ. 28 -

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் ஒன்றியம் மேலவஸ்தாச்சாவடி அருகில் டைட்டல் பார்க் அமைப்பதற்கான கட்டுமான பணிகள் நடைபெறுவதை தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்

மாவட்ட ஆட்சித் தலைவர் தீபக்ஜேக்கப் முன்னிலையில் தமிழ்நாடு டைட்டல் பார்க் மேலாண்மை இயக்குனர் ஜெயசந்திரபானு ரெட்டி, சட்டமன்ற உறுப்பினர்கள் துரை சந்திரசேகரன், டி.கே.ஜி.நீலமேகம், மாநகராட்சி துணை மேயர் மரு. அஞ்சுகம் பூபதி ஆகியோர் கலந்து கொண்டனர்.

3.40 ஏக்கர் பரப்பளவில்; 55,000 சதுர அடியில் ரூ 27.13 கோடி மதிப்பில் 4 அடுக்கு மாடி கட்டிடமாக இந்த டைட்டல் பார்க் கட்டுமானப் பணிகள் நடைபெறுவதை பார்வையிட்ட தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி ராஜா இப்பணிகளை விரைந்து முடிக்குமாறு அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இந்த ஆய்வின் போது வருவாய் கோட்டாட்சியர் இலக்கியா, செயற்பொறியாளர் பாலாஜி, து.செல்வம், டி.அருளானந்த சாமி, வட்டாட்சியர் அருள் ராஜ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்

# காரைக்குடி மண்டல தொ.மு.ச. கவனத்திற்கு!

## தொ.மு.ச. பேரவை அறிவிப்பு!

போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களின் 15வது ஊதிய உயர்வு ஒப்பந்த பேச்சுவார்த்தை மற்றும் இதர பிரச்சினைகள் குறித்து போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுடன் தொடர்ந்து பேசி வருகின்றோம். இந்தச் சூழ்நிலையில் தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையில் இணைந்து செயல்பட்டு வரும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக தொ.மு.ச. காரைக்குடி மண்டல தொ.மு.ச. பொதுச்செயலாளர் மா.பச்சமால் உண்ணாவிரதம் என்று அறிவித்திருப்பது ஏற்புடையது அல்ல.

எனவே, தொழிலாளர்கள் யாரும் உண்ணா விரதத்தில் பங்கேற்க வேண்டாம் எனவும், தொ.மு.ச. பேரவை பேச்சுவார்த்தை மூலம் அனைத்து பிரச்சினைகளையும் சுமூகமாக முடித்துக் கொடுக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

இடம் : கலைஞரகம்
நாள்: 27.11.2023

**மு.சண்முகம் எம்.பி.,**
பொதுச் செயலாளர்
தொ.மு.ச. பேரவை



மீன் வளம் – மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதா கிருஷ்ணன் ஈரோடு மாவட்டம் பவானிசாகரில் மீன்குஞ்சுகள் வளத்தினை பெருக்கிடும் நோக்கத்தோடு ஆறுகளில் நன்னீர் மீன்குஞ்சுகள் இருப்பு செய்திடும் திட்டத்தினை துவக்கி வைத்தும், சத்தியமங்கலம் வட்டம் பகுத்தம்பாளையம், உப்பு பாளையம் பகுதியில் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் சார்பில் செயல்படும் காங்கேயம் மாட்டின ஆராய்ச்சி நிலையத்தினை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு ஆராய்ச்சி நிலையத்தின் செயல்பாடுகள் குறித்து தொடர்புடைய துறை அலுவலர்களிடம் கேட்டறிந்தார். நிகழ்வில் ஈரோடு வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் என்.நல்லசிவம், மீன்வளம், மீனவர் நலன் ஆணையர் டாக்டர் கே.எஸ்.பழனிசாமி, ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜகோபால் சுன்கரா, பவானிசாகர் (மண்டலம்) மீன் வளம், மீனவர் நலன் துணை இயக்குநர் சு.தில்லைராஜன், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக துணைவேந்தர் டாக்டர் செல்வகுமார், கால்நடை உற்பத்தி மைய இயக்குநர் மீனாட்சி சுந்தரம், பேராசிரியர்/ தலைவர் காங்கேயம் ஆராய்ச்சி நிலையம் குமாரசாமி, கழக நெசவாளரணி செயலாளர் சிந்து ரவிச்சந்திரன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், துறை சார்ந்த அலுவலர்கள் பலர் உள்ளனர்.



தி.மு.க. கழக இளைஞரணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு கரூர் மாவட்டக் கழகம் சார்பில் மாவட்டச் செயலாளரும் அமைச்சருமான வி. செந்தில் பாலாஜி ஆலோசனைப்படி மாவட்டம் முழுவதும் நலத்திட்ட உதவிகள் வழங்கி கொண்டாடப்பட்டது. கரூர் வெண்ணைமலை அன்புக்கரங்கள் இல்லத்தில் கழக முன்னோடிகள் ஆதரவற்றோருக்கு உணவு வழங்கினர்.